# NSW அரச பாடசாலைகளில் அதிஉயர் உள்ளாற்றல் மிக்கதும் மேன்மைத்திறனும் வாய்ந்த கல்வி – பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான வழிகாட்டி

அதிஉயர் உள்ளாற்றல் மிக்கதும் மேன்மைத்திறனும் வாய்ந்த கல்வி (High Potential and Gifted Education (HPGE)) என்பது NSW அரச பாடசாலைகளில் உள்ள அனைத்து மாணவர்களும் தங்கள் குறிப்பிட்ட கற்றல் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வத்துடனும் மற்றும் சவாலை எதிர்கொள்ளும் நிலையிலும் ஈடுபட உதவுகிறது. இது ஒவ்வொரு மாணவரதும் படைப்பாற்றல், அறிவாற்றல், உடல்திறன் மற்றும் சமூக-உணர்வுத்திறன் ஆகிய 4 உள்ளாற்றல் துறைகள் (வகைகள்) மீது முக்கிய கவனம் செலுத்துகிறது.

## 4 உள்ளாற்றல் மிக்க துறைகள்

உள்ளாற்றல் மிக்க துறைகள் என்பவை மக்கள் கொண்டிருக்கக்கூடிய 4 முக்கிய வகையான இயற்கைத் திறன்கள் ஆகும். அவை பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை மற்றும் ஒன்றோடொன்று மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றன. இவை தான் அந்த துறைகள்:

**படைப்பாற்றல் துறை** - இது கற்பனைத்திறன், தற்படைப்பாற்றல் மற்றும் புதிய சிந்தனைத் திறன்களைக் குறிக்கிறது. இந்தத் திறன்களை சிறுவர்கள் ஒரு சிறுகதை எழுதும் விதத்தில், ஒரு பாடலை இயற்றும் முறையில், ஒரு சுவரொட்டி வரையும் முறையில், கணிதப் பிரச்சனைக்கு தனித்துவமான ஒரு தீர்வை உருவாக்கும் முறையில், அல்லது ஒரு நடனத்தை வடிவமைக்கும் முறையில் காணலாம்.

**அறிவாற்றல் துறை** - இது சிக்கலான கருத்துக்களைப் புரிந்துகொள்வது, சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் அறிவைப் பயன்படுத்துவதில் உள்ள திறன்களைக் குறிக்கிறது. உதாரணமாக, ஒரு குழந்தை விரைவாகவும் எளிதாகவும் கற்றுக்கொள்வதாக இருக்கலாம் அல்லது தத்துவம், அறிவியல் அல்லது புத்தகங்களைப் பற்றிய ஆழமான புரிதலைக் காட்டுவதாக இருக்கலாம்.

**உடல்திறன் துறை** – இது மனித இயக்கங்களில் உள்ள இயற்கையான திறன்களைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, விளையாட்டு நடவடிக்கைகள், தையல் வேலை, தச்சுவேலை அல்லது பொறியியல் ஆகியவற்றில் இந்த திறன்கள் வெளிப்படும். இத்தகைய திறன்களை வகுப்பறையிலும் மற்றும் விளையாட்டு மைதானத்திலும், கூடுதலாக பள்ளி மற்றும் சமூக நிகழ்வுகள் மற்றும் போட்டிகளிலும் கவனிக்கலாம்.

**சமூக-உணர்ச்சித்திறன் களம்** - இது தங்கள் உணர்ச்சிகளை நிர்வகிக்கும் திறன் மற்றும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன்களைக் குறிக்கிறது. இந்தத் திறன்கள் வகுப்புத் தோழர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடனான தொடர்பாடல்கள் மூலம் நிரூபிக்கப்படலாம். உதாரணமாக, ஒரு பிள்ளை மிகவும் தன்னம்பிக்கை கொண்டவராகவும், மற்றவர்களை வழிநடத்துவதிலும் அவர்களுடன் இணைந்து செயற்படுவதிலும் சிறந்தவராகவும் இருக்கலாம் அல்லது தொழில் முனைவோர் திறன்களைக் காட்டலாம்.

## அதிஉயர் உள்ளாற்றல் மிக்கதும் மேன்மைத்திறனும் வாய்ந்த மாணவர்களுக்கு பாடசாலைகள் எவ்வாறு ஆதரவுதவியளிக்கின்றன

ஒரு பிள்ளையின் உள்ளாற்றல் மாறுபட்டதாக இருக்கலாம், எனவே அவர்களுக்கு வெவ்வேறு வகையான ஆதரவுதவி மற்றும் கற்பித்தல் தேவைப்படலாம். எடுத்துக்காட்டாக:

**அதிஉயர் உள்ளாற்றல் கொண்ட மாணவர்கள்** என்பவர்கள், அதே வயதுடைய மாணவர்களை விட அதிக திறன் கொண்டவர்கள், மேலும் அவர்கள் அதிக சவால்களை சந்திக்க நேரிடுவதால் மேலும் பயனடையலாம்.

**மேன்மைத்திறன் கொண்ட மாணவர்கள்** தங்கள் வயதுடைய மாணவர்களுடன் ஒப்பிடும்போது மிக உயர்ந்த திறனைக் கொண்டுள்ளனர், மேலும் வாய்ப்புகள் வழங்கப்படும்போது தங்கள் திறமையை விரைவாகவும் எளிதாகவும் வளர்த்துக் கொள்ளலாம்.

**அதிஉயர் மேன்மைத்திறன் கொண்ட மாணவர்கள்** விதிவிலக்கான திறனைக் கொண்டுள்ளனர், மேலும் அவர்களின் மேம்பட்ட கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தேவைப்படலாம்.

அதிஉயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மையான திறன் கொண்ட மாணவர்களுக்கு பாடசாலைகள் பலவகையான கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் திட்டங்களின் மூலம் ஆதரவுதவி வழங்குகின்றன. இதில் பின்வருபவை அடங்கும்:

- மாணவர்களை சவாலுக்குற்படுத்தும் மற்றும் அவர்களைத் ஊக்குவிக்கும் பாடங்கள்
- அறிவை விரிவாக்கும் செயற்பாடுகள் மற்றும் பாடத்திட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகள்
- ஒத்த திறன் கொண்ட மாணவர்களை ஒரு குழுவாக ஒன்றிணைத்தல்
- பொருத்தமான வேளைகளில், துரித கற்பித்தல் போன்ற உயர்தரக் கற்றல் வழிகளை கையாளுதல் (பாடத்திட்டத்தை விரைவாக கற்பித்தல்)
- நல்வாழ்வு மற்றும் சமூகத் திறன்கள் வளர்ச்சி ஆகியவற்றுக்கான ஆதரவுதவி.

மாணவர்களை உயர் உள்ளாற்றல் நிலையில் இருந்து உயர் செயற்திறன் நிலைக்கு கொண்டுசெல்ல உதவுவதே இதன் இலக்கு - அது விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதம், மொழிகள், கலைகள், விளையாட்டு, தலைமைத்துவம், அல்லது வேறு எந்தத்துறையாக இருந்தாலும் சரி.

## ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர்

மாற்றுத்திறனாளிகள், பல்வேறு பின்னணிகள் மற்றும் மொழிக்குழுக்கள் உட்பட உயர்திறமை கொண்ட மாணவர்கள் எந்த பின்னணியிலிருந்தும் வரலாம். இவர்களில் சிலர் ஏற்கனவே பள்ளியில் சிறப்பாகச் செயல்படுகிறார்கள், மற்றவர்களுக்கு தம்மால் முடிந்ததை சிறந்த முறையில் செய்ய சிறப்பு உதவியோ அல்லது ஆதரவோ தேவைப்படலாம். திறமைமிக்க மாணவர்களுக்கு ஆதரவுதவி தேவையில்லை என்ற பொதுவான தவறான புரிதல் உள்ளது ஆனால், பாடசாலையில் ஆர்வத்துடன் சிறந்த முன்னேற்றத்தை காண சிலருக்கு குறிப்பிட்ட உதவிகள் அவசியமாக இருக்கலாம்.

## உங்கள் பிள்ளை உயர் உள்ளாற்றல் இருப்பதாகவோ அல்லது திறமைசாலியாகவோ இருக்கலாம் என்று நீங்கள் நம்பினால் என்ன செய்வது

உங்கள் பிள்ளைக்கு உயர் உள்ளாற்றல் இருக்கலாம் அல்லது அவர் ஒரு திறமைசாலியான மாணவராக இருக்கலாம் என்று நீங்கள் நினைத்தால், தயவுசெய்து உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் இதைப் பற்றி பேசுங்கள். ஆசிரியருடன் பேசும்போது, உங்கள் பிள்ளை என்ன செய்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள் — அவை எந்தவொரு துறையிலும்(domains) உயர் உள்ளாற்றல் அல்லது திறமை உள்ளதைக் காண்பிக்கும் அறிகுறிகளாக இருக்கலாம்.

பிள்ளையைப் பற்றிய கவனிக்கத்தக்க தகவல்களைப் பள்ளியுடன் பகிர்வதுடன் பள்ளியுடன் கூட்டிணைந்து செயற்படுவதன் மூலம் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் தங்கள் பிள்ளையின் கல்வியில் முக்கியமான பாத்திரம் வகிக்கிறார்கள்.

## HPGE கொள்கை

உயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மைத்திறன் கல்விக்கொள்கை NSW முழுவதும் உள்ள ஒவ்வொரு அரச பாடசாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இது ஆசிரியர்கள் உயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மைத்திறன் உள்ள மாணவர்களுக்கு என்ன தேவை என்பதை மதிப்பிடவும் அடையாளம் காணவும் உதவுகிறது, மேலும் அவர்கள் வளரவும் வெற்றிபெறவும் வாய்ப்புகளை எவ்வாறு வழங்குவது என்பதையும் காட்டுகிறது.

## மேலும் தகவல்களை எங்கே பெறுவது

- NSW இல் உள்ள ஒவ்வொரு பொதுப் பாடசாலையும் HPGE செயல்பாடுகளை வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு உங்கள் பிள்ளையின் பாடசாலை வலைத்தளத்தைப் பார்க்கவும்.
- உயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மைத்திறமை உள்ள மாணவர்களுக்கு பாடசாலை எவ்வாறு ஆதரவுதவியளிக்கிறது என்பதைக் கேட்டறிய உங்கள் பிள்ளையின் ஆசிரியர்களிடம் பேசலாம்.
- கொள்கை மற்றும் வளங்களை ஆய்ந்தறிய திணைக்களத்தின் உயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மைத்திறன் கல்வி வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

## தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

உங்கள் பிள்ளையின் பாடசாலையுடன் உயர் உள்ளாற்றல் மற்றும் மேன்மைத்திறன் கல்வி பற்றிப் பேச உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற தொலைபேசி எண்ணை அழைத்து, உங்களுக்கு எந்த மொழி தேவை என்பதை கூறி, பாடசாலையை அழைக்கும்படி கூறுங்கள்.

உங்கள் உரையாடலுக்கு உதவ, ஒரு உரைப்பெயர்ப்பாளர் இணைக்கப்படுவார். இந்த சேவைக்கு உங்களிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது.